**OS.No**. 38/2017

**DW**1 - சரஸ்வதி க/பெ. ராமசாமி

நாள். 07.10.2023

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் முதல் விசாரணையில் தெய்வசிகமணி என்ற பெயரை சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். அவர் என்னுடைய கணவருக்கு தெரிந்தவர்.அவர் எந்த ஊர் என்றால் வெளி ஊர். அவர் என் மகளுக்கும் பேரனுக்கும் தெரிந்த நபர் என்றாலும் என் கணவருக்கு என் பெயருக்கு எழுதிவைத்தாக சொலப்படும் செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள விவரங்கள் என் கணவருக்கு முழுவதுமாக தெரியாது என்றாலும் மேற்படி பொய்யான செட்டில்மெண்ட் பத்திரத்திற்கு ஒரு சாட்சி உருவாக்குவதற்காக தெய்வசிகமணி என்ற பெயரை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் மேற்படி தெய்வசிகமணி என் கணவருக்கு தெரிந்து நபர் என்பதும் அவர் எங்கள் வீட்டிற்கு வந்ததாக சொல்லியுள்ளதும் சார் பதிவாளர் அலுவகத்திற்கு வந்ததாக சொல்லியுள்ளதும் பொய்யானது என்றால் சரியல்ல. என்னுடைய கணவருக்கு நினைவு இல்லாமல் இருந்த போது என்னுடைய மருமகன் முத்துக்குமாரை வைத்து செட்டில்மெண்ட் ஆவணம் தயார் செய்து வந்து அதில் உள்ள விவரங்களை என்னுடைய கணவருக்கு தெரிவிக்காமல் அவரிடம் கையெழுத்து பெற்றுள்ளோம் என்றாலும் சரியல்ல. எனவே மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் சட்டடப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ராமசாமி அனைத்து வாரிசுகளுக்கும் பாகம் கிடைக்கத்ததக்கது என்றால் சரியல்ல.

**6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னுடைய கணவர் இறக்கும் தருவாய் வரையில் என் மீதும் என்னுடைய மகன்கள் மகள்கள் மீதும் சரிசமமாக தான் பாசம் வைத்து இருந்தார் என்றால் ஆமாம். சொத்து எனக்கு மட்டும் தான் என சொல்லி வந்தார். எனக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் எதுவும் இல்லை என்றாலும் என் கணவர் உயிரோடு இருக்கும் வரை என்னை பராமரித்து வந்தார் என்றாலும் சரிதான். அவர் இறக்கும் தருவாயில் என்

கையில் தனிப்பட்ட முறையில் பணமோ அசையா சொத்துக்களோ இருந்ததா எனறால்ஆமாம் என் கணவர் கொடுத்து இருந்தார். அவர் சம்பாரித்ததை எனக்கு எழுதி கொடுத்துவிட்டார். அவர் இறக்கும் தருவாயில் என் கையில் பணம் நகை அசையா சொத்துக்கள் என்ன இருந்தது என்றால் பணம் ரூ10 லட்சம் மற்றும் 75 பவுன் நகை இருந்தது. மேற்படி இரண்டும் என் கணவர் எனக்கு கொடுத்தது என்றால் ஆமாம். என் கணவர் விட்டு சென்ற சொத்துக்களில் ரூ50 லட்சம் கடன் இருப்பதாக வங்கியில் இருந்து எனக்கு அறிவிப்பு வந்தது என்றால் ஆமாம்.

2. மேற்படி அறிவிப்பு எனக்கும் என்னுடைய மகன்கள் மகள்கள் ஐந்து பேருக்கும் வந்தது என்றால் ஆமாம். என் கணவர் பெயரில் உள்ள கடனை அடைப்பதற்கு மேற்படி நகையோ பணத்தையோ பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் தான் ரூ44 லட்சம் கட்டினேன். வங்கிற்கு ஒரே தேதியில் கட்டினேனா பல்வேறு தேதியில் கட்டினேனா என்றால் ஒரே தேதியில் தான் கட்டினேன். எந்த தேதியில் கட்டினேன் என்பது ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. அப்போது என்னுடைய வாரிசுகளை நான் கூப்பிட்டேனா என்றால் இல்லை. நான் தனியாக சென்று கட்டினேனா என்றால் பக்கத்து வீட்டு பையனை அழைத்து சென்றேன். மேற்படி தொகை முழுவதையும் தனிப்பட்ட முறையில் செலுத்துவதற்கு எனக்கு வசதியில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மகன்கள் மகள்கள் மற்றும் குடும்பத்திலுள்ள அனைவரும் சேர்ந்து தான் கட்டினோம் என்றால் சரியல்ல. என்னுடைய மகள் சுமதி உடைய மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதிவைப்பதற்கு முன்பு செலுத்தினேனா அல்லது அதற்கு பின்னர் செலுத்தினேனா என்றால் எழுதிவைப்பதற்கு முன்னரே கட்டிவிட்டேன்.

3. வங்கியில் பணம் செலுத்தியதை காட்டுவதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். 2011ல் என்னுடைய கணவர் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்ததாக சொல்லப்படும தேதியில் அவருக்கு 85 வயது பூர்த்தி ஆகி இருந்தது என்றால் இல்லை 75 தான். வயது மூப்பின் காரணமாக என்னுடைய கணவருக்கு சர்க்கரை நோய் நரம்பு தளர்ச்சி மற்றும் ரத்தஅழுத்தம் ஆகிய வியாதிகளால் பாதிக்கப்பட்டு நடமாடும் இல்லாத நிலையில் இருந்தார் என்றால் இல்லை. சுயநினைவுயம் இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் என்ன என்பதும் அதில் உள்ள விவரங்கள் என்ன என்பதும் தெரியாத

நிலையில் என்றால் சரியல்ல. என்ன செய்கிறோம் என்பது தெரியாத மனநிலையில் இருந்தபோது அவரிடம் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வாங்கியுள்ளதால் அது சட்டப்படி செல்லத்தக்கதுஅல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து மேலும் வில்லங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக என்னுடைய பேரன் தயாநிதி பெயரில வேண்டும் என்றே செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் எனக்கு எழுதிவைத்ததாக சொல்லப்படும் செட்டில்மெண்ட் பத்திரமும் என்னுடைய பேரன் தயாநிதி பெயரில் நான் எழுதிவைத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரமும் சட்டப்படி செல்லத்தக்கதுஅல்ல என்றால் சரியல்ல.

4. இன்றைய தேதி வரையிலும் நானும் என்னுடைய மகள்கள் மற்றும் மகன்களும் இறந்த போன இன்னொரு மகனின் வாரிசுகளும் தாவா சொத்தை கூட்டாக தான் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. என்னுடைய பேரன் தயாநிதி பெயரில் நான் எழுதிவைத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில என்னுடைய பேரன் தனித்த சுவாதீனத்தில் இருந்து வருவதும் சொல்லியிள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. என்னுடைய பேரன் தயாநிதி வழக்கு சொத்திற்கு போனதே இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய பேரன் தயாநிதியை இந்த வழக்கில் தரப்பிரான சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என சொல்லியுள்ளதும் தவறானது என்றாலும் என்னுடைய பேரன் தயாநிதி இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கும் என்னுடைய மகன்களுக்கும் மகள்களுக்கும் தலா 5ல் 1 பங்கு பாகம் பாத்தியம் என்றால் சரியல்ல. யாருக்கும் பாத்தியம் கிடையாது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் மேற்படி தெய்வசிகமணி என் கணவருக்கு தெரிந்து நபர் என்பதும் அவர் எங்கள் வீட்டிற்கு வந்ததாக சொல்லியுள்ளதும் சார் பதிவாளர் அலுவகத்திற்கு வந்ததாக சொல்லியுள்ளதும் பொய்யானது என்றால் சரியல்ல. உண்மையான சாட்சிகள் உண்மை தெரியும் என்பதாலும் அவர்கள் எங்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க மாட்டார்கள் என்பதாலும் வேண்டப்பட்ட தெய்வசிகமணி உடன் இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னுடைய கணவர் ராமசாமி பிரின்ஸ் டையிங் பெயரில் நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் ஆமாம். அந்த நிறுவனத்திற்காக கார்பிரேசன் வங்கியில் லோன் வாங்யிருந்தார் என்றால் ஆமாம். மேற்படி கடனை திருப்பி செலுத்தி தாவாசொத்திற்கான ஆவணங்களை திரும்ப பெற்றுக்கொண்டோம் என்றால் ஆமாம். தற்போது 7 ம் பிரதிவாதிக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI
Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.10.07 18:18:47 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.